வேலை எதுவாக இருந்தாலும், அவர்கள் அந்தப் பணிக்குச் சரியானவர்களாக இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் பட்டு அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம், பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 413, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

413—

பச்சைமலையில் பெரும் பழப் பண்ணை அமைத்தல்

*5564.—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், பச்சை மலையில் பெரும் பழப் பண்ணை (Giant Orchard) அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியில் உள்ள பச்சைமலையில் அரசுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அதிக அளவில் பழங்கள் விளைவிக்கவும் மலைவாழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் விளைவிக்கும் பழங்களை பெரும் பழப் பண்ணையில் விற்பதற்கும், அதே சமயம் அவர்களுக்கு நல்ல விலையும் கிடைக்க வாய்ப்பு இருப்பதால், பச்சைமலையில், அடுத்த நிதி ஆண்டிலாவது பெரும் பழப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, 1992–97-ல் ரூ. 55 இலட்சம் தேவை என்று எதிர்பார்க்கப் படுகின்றது. அப்போது அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 414, திரு. வி. பி. சந்திரசேகர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

414—

கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துவமனை

*6135—திரு. வி.பி. சந்திரசேகர் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொள்ளாச்சித் தொகுதியிலே, பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கஞ்சம் பட்டியில், அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்துமே, விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கே கால்நடைகள் அதி கமாக வளர்க்கப்படுகின்றன. அந்தக் கால்நடைகள் நோய் வாய்ப்படுகிறபோது, அவற்றை பொள்ளாச்சிக்கோ, உடுமலைப் பேட்டைக்கோ கொண்டு செல்கிற நிலை இருக்கிற கார ணத்தினால், கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம், கஞ்சம்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகின்றது. கால்நடை மருந்தகத்திற்குத் தினந்தோறும் சிகிச்சைக்காக வரும் கால் நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, பொதுவாக கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்தப்படுகிறது. அப்படி, கஞ்சம்பட்டி கிராமத்தில், சிகிச்சை பெறும் கால்நடைகளின் எண்ணிக்கை, நாற்பதுக்கும்